வந்திருக்கும். முழுப் பணம் கட்டினுலொழிய டிகிரி கோர்ஸ் வராது. அந்த 5 லட்ச ரூபாயையும் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்து, சிபார்சு செய்து பெற்றுத்தந்தால், அதற்குப் பிறகு டிகிரி கோர்ஸ் பற்றி எண்ணலாம். முழுத் தொகை வராத வரையில் டிகிரி கோர்ஸ் தரக்கூடாது என்று கொள்கை வைத்திருக்கிறோம்.

கூறைநாடு பகுதியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

*126 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர். தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம், கூறைநாடு பகுதியில் பெண்களுக்கு தனியே ஒரு உயர் நிலைப்பள்ளி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

நாகூர் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள்.

*127 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு கல்வி–சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

நாகூர், ஏர்வாடி போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நாகூருக்கு நிறைய முஸ்லீம்கள் வருகிற காரணத்தால், இனிமேலாவது சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். ஏராளமான மக்கள் கூடுகிற எல்லா இடங்களிலும் சுற்றுலா மாளிகை வேண்டுமென்ற பேரவா இருந்தாலும் அதை நிறைவேற்றிக்கொள்ளத்தக்க அளவிற்கு நிதி வசதி, மற்ற வசதிகள் இல்லை. இருக்கிற நிதி வசதியை வைத்துக் கொண்டு, மற்ற நாட்டவர், வெளி மாநிலங்களிலிருந்து அடிக்கடி வந்து போகும் கொடைக்கானல், குன்னூர், ஊட்டி, குற்றாலம் போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகை கட்டவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் படிப்படியாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இப்போது சுற்றுலா மாளிகை கட்டும் முயற்சி இல்லையென்றாலும், நாளடைவில் வரலாம்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, நாகூர், ஏர்வாடி, முத்துப் கபட்டை போன்ற இடங்களுக்கு முஸ்லீம்கள் மட்டும் வரவில்லை, இந்துக்களும் வருகிறார்கள். எல்லோருக்கும் தங்குவதற்கு வசதி இல்லாமக்